[1995 மார்ச் 29

150—

நன்னிலம் தொகுதியில் வேளாண்மை அங்காடி வளாகம் கட்டுதல்

*35779—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, வேளாண் துறையின் கீழ் அங்காடி வளாகம் கட்டும் திட்டத்தை செயற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நன்னிலம் தொகுதியில் வேளாண்மைத் துறையின் கீழ் அங்காடி வளாகம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

முற்பகல் 10-45

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான நன்னிலம் தொகுதியிலேதான் நெல்சாகுபடி அதிகமாக இருக்கிறது. அதேபோல நிலத்தடி நீரும் அதிகமாக இருக்கிற காரணத்தினால் இரண்டு போகம் என்ற நிலைமை மாறி முப்போகம் என்ற வகையில் நெல் விளைவிக்கின்ற காரணத்தாலும் அதிகமாக பருத்தி, எள் போன்றவை விளைவதாலும் ஒரு அங்காடி அமைக்க அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு அப்படி அமைக்கப்படுமேயானால் அதனைச்சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள சாலைகள் எல்லாம் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிற ஒரு காரணத்தாலும் இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் கூட வருகிற ஆண்டில் கட்டித்தரப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை மாவட்டத்தில் மாட்டுத்தாவணி என்ற இடத்தில் வணிகர்களின் வசதிக்கென வர்த்தக வளாகம் ஒன்று

1995 மார்ச் 29]

9 ஏக்கர் நிலப் பரப்பில் ரூபாய் 12.8 கோடி மூலதனத்தில் அமையவிருக்கிறது. அதனைப்போல் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலும், பெரியார் மாவட்டத்தில் ஈரோடு நகருக்கு அருகிலும் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் விவசாய விளை பொருட்கள் அதிக அளவில் வரத்து உள்ள முக்கிய நகரங்களில், இடம் கிடைக்கும் வசதியை அடிப்படையாகக் கொண்டு, அந்த மாவட்ட விற்பனைக் குழுவின் நிதிநிலையை அனுசரித்து படிப்படியாக வரும் ஆண்டுகளில் வணிக வளாகம் அமைக்கப்படும். அப்போது நன்னிலம் தொகுதியும் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளாகம் அமைப்பதற்கு முன்னால் அதற்குண்டான ரோடுகள், சாலைகள் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வளாகம் அமைத்ததற்குப் பின்னால் சாலைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

151—

விருத்தாசலத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

22345*—திரு. ஆர்.டி. அரங்கநாதன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.